273

11 OCT 1923

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ ஜ்ஞானஸம்பந்த குருப்யோநம:

ஸ்ரீ குலச்சிறை நாயனார்

புராணம் மூலமும்

சித்தாந்தபோத ரத்தினாகரம்

கா-ஆலாலசுந்தரப்பிள்ளை அவர்கள்

இயற்றிய பொழிப்புரை - விசேடவுரைகளும்

ஸ்ரீமான்

திருப்பெருந்துறை

ஆ. வேலாயுதப்பிள்ளை அவர்கள்

விருப்பத்தின்படி

சென்னை:

கணேச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

விலை அணா - ௨

Q23ux1, KL
N23
85300

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வன்றொண்ட தேசிகாய நம:

முகவுரை.

1361

ஞானமணம், தொண்டின்மணம், தொண்டர்மணம், அன்பின் மணம் ஆகிய மணங்களை மணக்கத் திருவவதாரஞ்செய்தருளிய சைவ சமயாசாரியர்கள் நால்வருள், ஸ்ரீ ஜ்ஞானஸம்பந்த மூர்த்திகளால் புகழ்ந்தோதப்பட்டவரும் அக்குருநாயனது திருவருள்பெற்று விளங்குபவரும் ஸ்ரீசுந்தரமூர்த்திகளால் இலைமலிந்த வேல்நம்பி, கலைமலிந்த சீர்நம்பி - அருநம்பி - நறைக்கொண்ட வேல்நம்பி. அடல் சூழ்ந்த வேல்நம்பி - முதலான பலநம்பிகளுக்கு அடிமைகூறுமிடத்தில் பெருநம்பியென்று போற்றப்பட்டவரும், நின்றசீர் நெடுமாறற்கு முதன்மந்திரியாரும், மங்கையர்க்கரசியார் வளர்த்தசைவவான் பயிர்க்கு வேலி போன்றவருமாகிய குலச்சிறைநாயனார் புராணத்தை உரையுடன் முதலில் தனியே அச்சிட்டுத்தரவேண்டுமென்றும், அவ்வாறே மற்ற நாயன்மார் புராணங்களைப் பின்னர் அச்சிடவேண்டுமென்றும், இச்செயலால் ஒவ்வொருநாயன்மார் அவதாரக்ஷேத்திரங்கள்தோறுமுள்ள சிவநேசச்செல்வர்கள் முயன்று அந்தந்த நாயன்மார்களுக்கு அந்தந்த க்ஷேத்திரங்களில் ஆலயம் குருபூஜைமடம்முதலியவற்றை அமைத்துப்பலரையும் நல்வழிப்படுத்துவார்களென்றும் பேரவாக்கொண்டு அன்பும் நண்பும் பண்பும் வாய்ந்த தற்காலம்

இரங்கூனில்வசிக்கும் ஸ்ரீமான் - திருப்பெருந்துறை வேலாயுதம் பிள்ளை அவர்கள் எமது தந்தையாராகிய காஞ்சிபுரம் ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்களைக் கடிதமூலமாகக்கேட்டு அதற்குரிய செலவிற்கும் பணம் அனுப்பிவைத்தனர். ஆனால் எமது தந்தையார் சின்னாளில் இறைவன் திருவடிசேர்ந்தபடியால் இந்நாள்பொறுத்து அவரெழுதியுள்ள உரையை அச்சிடலாயிற்று.

இதுபோலவே ஆங்காங்கு நாயன்மார்கள் அவதார க்ஷேத்திரங்களில் வசிக்கும் சிவநேசச் செல்வர்கள் அந்தந்த நாயன்மார்களின் சரித்திரங்களை யச்சிட்டுப் பலரும் படிக்கச்செய்து மேற்கூறியவாறு பலரையும் நல்வழிப்படுத்துமாறு கேட்டுக்கொள்வதுடன், இதனைக் கண்ணுறும் அன்பர்கள் குற்றமிருப்பின் அதனைப் பொறுத்துக் குணத்தைக் கைக்கொள்ளுமாறு திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சுபம்! சுபம்!

இங்ஙனம்:

கா. ஏகாம்பரம்.

85300

உ

OFFICE OF ... REGISTRAR ... MADRAS
11 OCT 1923

சிவமயம்.

ஸ்ரீ ஞானசம்பந்த குருப்யோநம:

திருஞானசம்பந்தமூர்த்திகள் தேவாரம்.

திருவாலவாய் பண்—புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கைமட மானி, பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும் பரவப், பொங்கழ லுருவன் பூதநாயகனால் வேதமும் பொருள்களு மருளி, அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த வாலவா யாவது மிதுவே. (௧)

* வெற்றவே யடியா ரடிமிசை வீழும் விருப்பினன் வெள்ளை நீறணியும், கொற்றவன் றனக்கு மந்திரி யாய குலச்சிறை குலாவி நின் றேத்தும், ஒற்றைவெள் விடைய னும்பரார் தலைவ னுலகினி லியற்கையை யொழிந்திட், டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற வாலவா யாவது மிதுவே. (௨)

செந்துவர் வாயாள் சேலன கண்ணாள் சிவன் திருநீற்றினை வளர்க்கும், பந்தணை விரலாள் பாண்டிமா தேவி பணிசெய்ப் பாரிடை நிலவும், சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தந் தண்ணெருக் கம்மலர் வன்னி, அந்திவான் மதிசேர் சடைமுடி யண்ண லாலவா யாவது மிதுவே. (௩)

* கணங்களாய் வரினும் தமியராய் வரினுமடியவர் தங்களைக் கண்டால், குணங்கொடு பணியுங் குலச்சிறை குலாவுங் கோபுரம் சூழ்மணிக் கோயின் மணங்கமழ் கொன்றை வாளரா மதியம் வன்னிவண் கூவிள மாலை, அணங்குவிற் றிருந்தசடைமுடி யண்ண லாலவா யாவது மிதுவே. (ச)

செய்யதா மரைமே லன்னமே யனைய சேயிழை திருந்துதற் செல்வி, பையரவல்குற் பாண்டிமா தேவி நாடொறும் பணிந்தினி தேத்த, வெய்யவேற் சூலம் பாசமங் குசம்மான் விரிகதிர் மழுவுடன் தரித்த, ஐயனு ருமையோ டின்புறுகின்ற வாலவா யாவது மிதுவே. (ரு)

* நலமில ராக நலமதுண் டாக நாடவர் நாடறிகின்ற, குலமில ராகக் குலமதுண் டாகத் தவம்பணி குலச்சிறை பரவும், கலைமலி கரத்தன் மூவிலை வேலன் கரியுரி மூடியகண்டன், அலைமலிபுனல்சேர் சடைமுடி அண்ண லாலவா யாவது மிதுவே.

முத்தின்றாழ் வடமுஞ் சந்தனக் குழம்பு நீறும்தன் மார்பினின் முயங்கப், பத்தியார்கின்ற பாண்டிமாதேவி பாங்கொடு பணிசெய நின்ற,சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே சுடர்மரகதமடுத் தாற்போல், அத்தனுர் உமையோ டின்புறுகின்ற வாலவா யாவது மிதுவே. (எ)

* நாவணங் கியல்வா மஞ்செழுத் தோதி நல்லவாய் நல்லியல் வாகும், கோவணம் பூதி சாதனம் கண்டாற் றொழுதெழு குலச்சிறை போற்ற,வேவணங் கியல்வா மிராவணன் திண்டோளிருபது நெரிதர வூன்றி, ஆவணங் கொண்ட சடைமுடி யண்ண லாலவா யாவது மிதுவே. (அ)

மண்ணெலா நிகழமன்னனாய் மன்னு மணிமுடிச் சோழன்
றன் மகளாம், பண்ணினேர் மொழியாள் பண்டிமா தேவி பாங்
கினாற் பணிசெய்து பரவ, விண்ணுளார் இருவர் கீழொடு
மேலுமளப்பரி தாம்வகை நின்ற, அண்ணலா ருமையோ டின்
புறு கின்ற வாலவா யாவது மிதுவே. (கூ)

* தொண்டரா யுள்ளார் திசைதிசை தோறுந் தொழுது
தன் குணத்தினைக குலவக், கண்டு நாடோறு மின்புறு கின்ற
குலச்சிறை கருதிநின் றேத்தக், குண்டரா யுள்ளார் சாக்கியர்
தங்கள் குறியின்கணெறியிடை வாரா, அண்டநா யகன்று
ணமர்ந்துவீற் றிருந்த வாலவா யாவது மிதுவே. (க0)

* பன்னலம் புணரும் பாண்டிமா தேவி குலச்சிறை
யெனுமிவர் பணியும், மன்னலம் பெறசீ ராலவா யீசன் றிரு
வடி யாங்கவை போற்றிக், கன்னலம் பெரிய காழியுள் ஞான
சம்பந்தன் தமிழிவை கொண், டின்னலம் பாட வல்லவரிமை
யோ ரேத்தவீற் றிருப்பவ ரினிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்திருப்பதிகத்தில் * இக்குறியிட்ட திருப்பாக்கள் குலச்
சிறையாரைக் குறித்தன.

ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் தேவாரம்.

திருத்தொண்டத்தொகை.

பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட
திருநாவுக்கரையன்ற னடியார்க்குமடியேன்
பெருநப்பிதுலச்சிறைதனடியார்க்குமடியேன்
பெருமிழலைக்குறும்பர்க்கும் பேயார்க்குமடியேன்
ஒருநம்பியப்பூதி யடியார்க்குமடியேன்
ஒலிபுனல்சூழ்சாத்தமங்கைநீலநக்கற்கடியேன்
அருநம்பிநமிநந்தியடியார்க்குமடியேன்
ஆரூரனாரூரி லம்மானுக்காளே.

திருச்சிற்றம்பலம்.

பெருநப்பி என்றதனால் பாண்டிநாட்டினையும் அந்நாட்டரசனையும் சமண சமயத்தில் சிறைப்படுத்திய எண்ணாயிரஞ் சமணத்தலைவர்களை வெல்வதற்குச் சோழநாட்டில் அவதரித்தருளிய பாலருவாய ரப்பதினாறாயிரந் திருக்கூட்டத்தோடும் எழுந்தருளச்செய்து அவர்களோடு வாதிடவுஞ் செய்து தோற்றவர்களை எண்ணாயிரங்கழுவில் ஏற்றுவித்து அரசனாகிய கூன்பாண்டியனை நின்றசீர்நெடுமாறனாகவும், பாயசீர்ப்பாண்டிமா தேவியாரை மங்கையர்க்கரசியாராகவும் சமண் அரசாட்சியா யிருந்ததைச் சைவ அரசாட்சியாகவும் முடிவில்லாதபுகழ்த் தொண்டின் முயற்சியினைச்செய்த பெருமையிற் சிறந்த புருடசிரேஷ்டர் என்றும், துலச்சிறை என்றதனால்-செப்பருங்குலச்

சீர்சிறைப்பட்டிருக்கும் சீராளர். எனவே குண சம்பந்தமாகிய நலத்தினை மிக்குடையதே குலம் என்று சிறந்தெடுத்தோதல் நூல்வழக்காதலின் அவ்வழக்கின் படியே சைவநற்குலத்துக்குரிய குணம் அனைத்தும் தம்முடையமன வாக்குக் காயங்களில் ஒருங்கே சிறைப்பட்டிருத்தலாகிய சிறப்புடையர் என்றும், தன் அடியார்க்கும் அடியேன் என்றதனால் - பிரமாபுரமேவிய பெம்மானை ஒருநெறியமனம் வைத்துணர் ஞானசம்பந்தப் பெருமான் தாம்பாடுந் திருநெறிய தமிழில் இவரிடம் சிறைப்பட்டிருக்கும் குணங்களை அடியவரெல்லாம் அறிந்து அக்குணங்களைக் கொள்ளுமாறு விதந்து கூறும் அருளைப் பெற்றனர்; யானோ குலத்துக்கேற்ற குணநலத்தைச்சிறிதும் சிறைப்படுத்தும் வகையறியாமற்போனதனால் இன்று இத்தேவாசிரியத்தின் கண்வந்த ஓர்விறன் மிண்டரால் இவன் அடியாரைக்கண்டு வணங்கும் குணநலமில்லாதவனுகக் காணப்படுகின்றுனாகலான் இவன் புறகு இவனை அப்புறப் படுத்துங்கள் என்று சொல்லத் தக்க இழிதகையைப் பெற்றேன். இனி இவ்விழிதகைமை யொழிதற்கான குண நலங்களை இவர்தன்னடியார்பாற் பெற்றுபுகழோடு வாழ அவருக்கே யன்றி அவரடியார்க்கும் அடியேனுகின்றேன் என்றும் அருளியவாறும்.

சுந்தரேசனது பரத்துவப்புகழோங்கவும், திருஞான சம்பந்தரது ஞானப்புகழோங்கவும், திருநீற்றின் உண்மைப்புகழோங்கவும், சைவசமயமே சமயம் என்னும் சைவசமயத்தின் புகழோங்கவும், சமயாதீதப்பழம் பொருள் கைவந்திடவோதும் தேவாரத்தின் கீர்த்தி ஓங்கவும், பாண்டிநாடு தமிழ் நாடென்று ஓங்கிவழங்கவும் தென்னவனாகிய நெடுமாறர் உயிரோடு உடலோங்கவும் பாண்டிமாதேவியார் மாங்கலியத்தோடு மனமோங்கி மகிழவும். உலகிலுள்ள சைவர்கள் வாயோங்கவும். சைவசமயம் என்னும் குலத்துக்குரியகுணங்களெல்லாம் அடியார்கள் தங்கள் உள்ளத்தில் சிறைப்படுத்தி வாழவும் செய்தவராகலான் - பெருநம்பி என்றார்.

ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் அருளிய
திருவந்தாதி.

அருந்தமிழாகரன் வாதிலமணைக் கழுநுதிமேல், இருந்தமிழ் நாட்டிடை யேற்றுவித் தோனெழிற் சங்கம்வைத்த, பெருந்தமிழ் மீனவன் றன்னதி காரிபிரசமல்கு, குருந்த்விழ் சாரன் மணமேற் குடிமன் குலச்சிறையே.

மந்திரவாதத்திலும் அனல் வாதத்திலும் புனல்வாதத்திலும் வென்றது தேவாரமாகிய அரியதமிழேயாகலானும் அத்தமிழைப் பாடினவர் திருஞானசம்பந்தப் பெருமானாராகலானும் அருந்தமிழாகரன் என்றும், அவரதுவாதில் தோற்ற அமணரைத் தீது நீங்கிட வன்கழு ஏற்றுவித்தார் ஆகலான் - வாதில் அமணைக்கழுநுதிமேல் இருந்தமிழ் நாட்டில் ஏற்றுவித்தோன் என்றும், தமிழ்ச் சங்கம் நிரீஇ யினர் பாண்டியர் ஆகலான் - எழில் சங்கம் வைத்த பெருந்தமிழ் மீனவன் என்றும், ஈறில் சீர்த் தென்னவன் நெடுமாறற்குச சீர் திகழ் மன்னு மந்திரிகட்கு மேலாகியார் ஆகலான் - மீனவன்தன் னதிகாரி என்றும், செந்நெலார் வயற்றீங் கரும்பினயல் துன்னுபூசப்புறம்பணை சூழ்ந்தது மணமேற் குடி ஆகலான் - பிரசமல்குகுருந் தவிழ்சாரன் மணமேற் குடி என்றும், அப்பதிக்குடிக்கு முதல்வர் ஆகலான் - மணமேற்குடிமன் என்றும், செப்பருஞ் சீர்க்குலம் (கூட்டம்) சிறையார் (பொருந்திய) திண்மை வைப்பாகலான் - குலச்சிறையே என்றும் கூறினர்.

இதனால் இந்நாயனாரது ஊரும் பேரும் தொண்டின் பேறும் கூறியவாறும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சேக்கிழார் பெருமான் அருளிய

குலச்சிறை நாயனார் புராணம்.

ஊர்ச்சிறப்பு.

பன்னு தொல்புகழ்ப் பாண்டிநல் நாட்டிடைச்
செந்நெல் ஆர்வயல் தீங்கரும் பின் அயல்
துன்னு பூகப் புறம்பணை சூழ்ந்தது
மன்னு வண்மையி னார்மண மேற்குடி.

(எ - து.) கொடையில் நிலைபெற்றுள்ளவர்கள் வாழும் மண மேற்குடிஎன்னும் ஊர் புலவர்களால் தொன்றுதொட்டுச் சிறந்தெடுத்துக் கூறும் பழமையாகிய புகழையுடைய பாண்டிநாட்டின்கண் செந்நெற்கள் நிறைந்த வயலின்கணுள்ள இனிய கரும்பு வேலியின் பக்கலில் நெருங்கிக் கமுகமரங்களை யுடைய மருதநிலத்தாற்சூழப் பட்டுள்ளது என்பதாம்.

பாண்டிநாடு உலகம்யாவையும் ஈன்ற அம்மையார் சிவபரஞ்சுடர் குமாரக்கடவுள் ஆகியமூன்றுதலைவர்களும் செங்கோல் செலுத்திய நாடென்றும், முச்சங்கங்களும் நிலவிய தமிழ்நாடென்றும், அனாதி தொட்டுப் புலவர்களால் புகழப்பட்டு வருவதென்றும் அந்நாட்டில் கமுகஞ்சோலைகள் முன்னரும் அதனருகில் கருப்பஞ்சோலைகளும் சூழ்ந்தவரப்பினையும் நெற்களிற் சிறந்த செந்நெற்களையும் உடைய வயல்களாலும் இல்லையென்னாது கொடுக்கும் கைவளப்பமுடைய குடிகளாலும் மணம்பெற்றுள்ளது மணமேற்குடி என்னும் ஊரென்

றும் கூறப்பட்டது. மணமேற்குடி என்றதனல் - தமிழ்மணத்தினல் புகழ்பெற்றநாட்டில் நிலவளத்தின் மணமும் கைவளமுடைய குடிகளின் மணமும் மேற்கொண்டிருப்பது என்க. (க)

திருநாமச் சிறப்பு.

அப்ப திக்கு முதல்வர் வன் தொண்டர்தாம்
ஒப்ப ரும்பெரு நம்பியென் றோதிய
செப்ப ரும்சீர்க் குலச்சிறை யார்திண்மை
வைப்பி னல்திருத் தொண்டின் வழாதவர்.

(எ - து) ஒப்பற்ற வன்றெண்டப் பெருமானர் "பெருநம்பி" என்று திருத்தொண்டத்தொகையில் சொல்லுதற்குரியவரும் ஏனையோரால் சொல்லுதற்கரிய திட்பமான உறுதிப்பாடுடைய திருத்தொண்டில் தவருதவரும் ஆகிய சிறப்பினையுடைய குலச்சிறையார் மேற்கூறிய மணமேற்குடி என்னும் ஊருக்குத் தலைவராயுள்ளவர் என்பதாம்.

இதனல் ஆளுடைய நம்பிகள் ஓதியருளிய தொண்டர் மணம் மணக்கத்தக்க திருத்தொண்டத் தொகையில் பெருநம்பி என்று மணக்கப் பெற்றவரும், ஞானமணம் மணக்கவந்த ஆளுடையபிள்ளையார் திரு நீற்றின் மணம் மணக்கச்செய்த திருத்தொண்டில் சமணரைக் கழுவேற்ற வேண்டுமென்னும் திண்மைத் தொண்டில் வழாதவர் என்கிற புகழ் மணம் வீசப்பெற்றவரும் ஆகிய குலச்சிறையார் தமது மணம் உலகெலாம் வீச அம்மணமேற்குடி என்னும் ஊருக்குத் தலைமையாயுள்ளவர் என்று கூறப்பட்டது. (உ)

அன்புநிற்கும் நிலையின் சிறப்பு.

கார ணம்கண் ணுதற்கன்பர் என்னவே
வாரம் ஆகி மகிழ்ந்தவர் தாள்மிசை
ஆரும் அன்பொடு வீழ்ந்தஞ்ச லிமுகிழ்த்
தீர நன்மொழி எய்த விசைத்துளார்.

(எ - து.) சீவன்முத்தி நிலைக்குக்காரணரும் பரமுத்தியநுபவத்திற்குக் காரணரும் இவ்விரண்டிற்கும் துணைக் காரணமாகிய ஞான அன்புகட்குக் காரணமும் கண்ணுதற்கடவுளாகிய இறைவனது அடியவர்களே என்று அவ்வன்பருக்கே உரிமையாளராய் உள்ளமகிழ்ந்து அவரது திருவடியின்மேல் பேரன்போடு வணங்கிக் கைகுவித்துநின்று அன்போடுபொருந்திய இனிய மொழிகளை அவர்கள் மனம்பொருந்தச் சொல்லுகின்றவர் என்பதாம்.

இதனால் சீவன்முத்திநிலையைக் கூட்டுவதாகிய ஞானத்திற்கும் பரமுத்தி அனுபவத்தை வருவிப்பதாகிய அன்பிற்கும் காரணர் அடியவர்களேயாமென்று எண்ணுகின்றவர்களைத் தமது நெற்றிக்கண்ணனாகிய இறைவனது ஞானக்கண்ணுறைகண்டு அவ்வடியவர்களுக்கு உரிமைபூண்டு அதனால் மனமகிழ்தலே மனத்தாற் செய்யப்படும் அன்பென்றும், மகிழும் அன்பின் வசப்பட்ட மனத்தோடு அவர் தாள்மிசை ஆரா அன்பொடு வீழ்தலே காயத்தாற் செய்யப்படும் அன்பென்றும். வீழும் அன்பின் வசப்பட்ட காயத்தோடு அஞ்சலி முகிழ்த்து காதன்மொழிபெய்த இசைத்தலே வாக்கினாற்செய்யப்படும் அன்பென்றும் அன்புநிற்கும் நிலைக்களத்தை யறிந்து அன்பினை மனமொழி மெய்களென்கின்ற அம்மூன்றிடத்தும் சிறைப்படுத்தும் வல்லாளரென்றும் கூறப்பட்டன.

எனவே "அன்புஅகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல்மரம்தளிர்த்தற்று" என்றதனால் மனத்தகத்து அன்புடையராயிருத்தலின் சிறப்பும், "புறத்துறுப்பெல்லாம் எவன்செய்யும் யாக்கை, அகத்துறுப்பு அன்பிலவர்க்கு" என்றதனால் - காயத்தினிடத்து அன்புடையா யிருத்தலின் சிறப்பும் "இன்சொலால் ஈரம் அளைஇ இப்படிறிலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்" என்றதனால் - வாக்கினிடத்தும் அன்புகலந்த சொல்லுடையாயிருத்தலின் சிறப்பும் உணர்ந்தவராய் அன்புடை மனத்தால் உயிரை வாழவைத்தும், அன்புடைக்காயத்தால் புறத்துறுப்புக்களைப் பயன்படச்செய்

தும், அன்புடைச்சொல்லால் சொல்லின் மெய்ப்பொருளைக் காணச் செய்தும் வருவதாகிய அமைச்சுத்தொழிலில் வல்லவரென்பதாம்.

“சின்னங்கள் கேட்பச்சிவனென்றேவாய்திறப்பாய்” என்றபடி திருஞானசம்பந்த மூர்த்திகளது பெருங்காள வோசையைக்கேட்ட போதே இவர் சரீரமானது நிலத்தில் பணிந்தெழவும் மனமானது களிப்படையவும் கரங்கள் அஞ்சலியாகக்குவிந்து தலைமேலேறவும் பாதங்களானது விரைந்து எதிர்செல்லவும் நெஞ்சினினிறைந்த ஆர்வமானது சிவகுமாரருடன்வரும் நற்றவக்கடல்போன்ற திருக் கூட்டத்தை முன்சென்று காணவுமாக. அதன்பின்னேசென்ற இவர் சமீபித்து நிலமுறவீழ்ந்துபணிந்து என்றுந் தோன்றுதிருந்தனராக லின் - வாரமாகிமகிழ்ந்தவர் தாமெனிசையாரும் அன்போடுவீழ்ந்து என்றார். திருஞானசம்பந்தமூர்த்திகள் * “திருந்தியசிந்தையீர் உமக்கு பெருமான்றன் திருவருள் பெருகு நன்மைதான் வாலிதே” என் றருள இந்நாயனார் மண்மிசைந்தாழ்ந்தெழுந்து *“சென்றகாலத்தின் பழுதிலாத்திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் இன்றெழுந்தரு ளப்பெற்ற பேறிதனால் எற்றைக்குந் திருவருளுடையேம் நன்றியி னெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ்வேந்தனும் உய்ந்து வென்றி கொள் திருநீற் றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத் தனம்,, என்று கூறினராகலின் - அஞ்சலிமுகிழ்த்த கரநன் மொழி யெய்த இசைத்துளார் என்றார். (௩)

அன்பினைச்செலுத்தும் நெறியின் சிறப்பு.

குறியின் நான்கு குலத்தின ராயினும்
நெறியின் அக்குலம் நீங்கின ராயினும்
அறிவு சங்கரற் கன்பா எனப்பெறில்
செறிவு றப்பணிந் தேத்திய செய்கையார்.

---

* திருவாசகம் திருவெம்பாவை - எ.

* திருஞானசம்பந்தமூர்த்திகள்-புராணம் ௬௫௮, ௬௫௯.

Q23 N23

(எ - து.) வருணங்களைக் குறித்தற்குக் குறித்திருக்கும் நடைநொடி பாவனைகளாகிய குறியின்கணின்றும் தவறாத நால்வகைக் குலத்தினராயினும், அக்குறிகளோடு அக்குல வொழுக்கங்களையும் நீங்கினவராயினும் அக்குலமுதலியவற்றினும் ஒழுக்கத்தினும் நின்ற அறிவு வேறுபடாது சங்கரனுக்குரிய வன்பில் தலைப்பட்ட அன்பினரென்று தாம் அறியப் பெறுவாராயினும் அவருடைய திருவடிகள் தமதுமுடியிற் பொருந்தவணங்கி எத்துகின்ற செய்கையை யுடையவர் என்பதாம்.

அந்தணர் முதலாகக் கூறப்படும் நால்வகைச் சாதிகுறிகளும் உடம்பின் சம்பந்தத்தைக் காட்டுவது. நால்வகைக்குலங்களும் குணத்தின் சம்பந்தத்தைக் காட்டுவது. அஃதேபோல் அன்பு - "அகர வுயிர்போல் அறிவாகிஎங்கும் நிகரில் இறைநிற்கும் நிறைந்து" என்று திருவருட்பயன்கூறியபடி அறிவுவடிவாகிய சங்கரனிடத்துப் பற்றியிருக்கும் அறிவின் பற்றினைக்காட்டுவது. இங்ஙனம் கூறியபடி உடம்பின் சம்பந்தத்தையும், குணத்தின் சம்பந்தத்தையும் வெளிப்படையாகக்காட்ட சாதியுங்குலமும் இருப்பதுபோல அறிவின் சம்பந்தத்தைக் காட்டுவதாகிய அன்பு வெளிப்படுமாயின் அவர்களைக் கண்டபொழுதே அவர்களடியில் தமது முடிபொருந்தப் பணிந்து போற்றுஞ் செய்கையுடையவரென்றும், அஃதேபோல் சாதியாகிய குறியின் நெறியும், குலத்தின் நெறியும் நீங்கினவராகிய அறிவின் சம்பந்தமாகிய சங்கரர்க்கன்பு ஒன்று மாத்திரம் உடையரென்று காணப்படின் அப்போதே அவரடியில் தமது முடிபொருந்தப்பணிந்துபோற்றுதலாகியசெய்கையும் உடையவரென்றும் கூறப்பட்டன.

குறியில் நான்கு குலத்தினராயினும், அறிவுசங்கரற் கன்பரெனப்பெறில் செறிவுறப்பணிந்தேத்திய செய்கையார், என்றும், நெறியின் அக்குலம் நீங்கினராயினும் அறிவுசங்கரற் கன்பரெனப் பெறில் செறிவுறப்பணிந்தேத்திய செய்கையார் என்றும், பணிந்தேத்தியசெய்கையார் என்பதை ஈரிடத்துங்கூட்டிப் பொருள்கொள்க.

85300

இதனால் சங்கரற்குரிய அன்பில் அறிவைச்செலுத்தாது குறியினுங் குலத்தினில் அறிவைச்செலுத்துவாராயின் அவர்களிடத்தும் பணிந்தேத்துஞ்செய்கையைச் செய்யார் என்றும், நெறியினும் அக்குலத்தினும் நீங்கி சங்கரற்குரிய அன்பினும் நீங்கி ஞானமாத்திரம் உடையோரிடத்தும் பணிந்தேத்துஞ் செய்கையைச் செய்யார் என்றும் குறித்ததுவாமெனக். (௪)

உலகர் கொள்ளும் நலத்தினராயினும்
அலகில் தீமைய ராயினும் அம்புலி
இலகு செஞ்சடை யார் அடி யாரெனில்
தலமுறப்பணிந் தேத்துந் தகைமையார்.

(எ - து.) உலகினரால் கொள்ளத்தகும் குலமுதலிய ஒழுக்கத்தினின்றும் தவறு நலடையாத நன்மையுடையவராயினும், பாவத்தினின்றும் நீங்கிப்புண்ணியம் உண்டாவதற்கு ஏதுவாக விதித்த அவ்வொழுக்கங்களைக் கைவிட்டு எண்ணிறந்த கொடுந்தொழில்களைச் செய்யுந் தீமையுடையவராயினும் சந்திரன்விளங்கும் சடையினையுடைய சிவபெருமானிடத்து அன்புபூண்ட அடியவர்களாயிருப்பாராயின் அவர்களைக் கண்டபொழுதே சாஷ்டாங்கமாகப்பணிந்து போற்றும் தருகியை உடையவர் என்பதாம்.

அலகில்தீமையராயினும் அம்புலிஇலகு செஞ்சடையார் அடியார் எனில் அவர் நலத்தினரேயாகலான் அவரைத் தலமுறப்பணிந்தேத்தும் தகைமையார் என்றும், உலகினர் கொள்ளும் நலத்தினராயினும் செஞ்சடையார் அடியார் ஆகார் எனில் அவர் தீமையரேயாலான் அவரைத் தலமுறப்பணிந்து எத்தாத் தகைமையார் என்றுங் கூறப்பட்டன.

இவ்விரண்டு திருவிருத்தத்தானும் அறிவின் சம்பந்தமாயுள்ளது சங்கரற் கன்பொன்றே யன்றி சாதி குலம் பிறப்பென்னும் இவைகள் அன்று; ஆகலான் சங்கரனியல்பையறிந்த அறிவுடையாரெல்லாம் அன்பொன்றையே கைக்கொள்வரென்றும் சாதிகுலம் பிறப்

பென்னும் இவைகளைக் கைவிடுவர் என்றும் உலகினியல் ஒன்றையே அறியும் அறிவுடையாரெல்லாம் சங்கரற்குரிய அன்பினைக் கைவிட்டுச் சாதிகுலம் பிறப்பென்னும் இவைகளைக் கைக்கொள்வர் என்றும் கூறப்பட்டன.

எனவே. சாதிகுலம் பிறப்பென்னும் இவைகளில் நிலைத்துநிற்போரெல்லாம் அங்ஙனேநிற்க, நானகு குறியினும் நான்குகுலத்தினும் அல்லாதவேறுகுறியினும் வேறுகுலத்தினும நிற்போரெல்லாம் அங்ஙனேநிற்க, இவ்விருவரும் அன்புநெறியினையும் அந்நெறியின் குணங்களையும் கைக்கொள்ளவேண்டுமென்பது பெற்றாம்.

ஏனெனில் குலமுதலியவை உடைமையாயிருத்தல் இன்மையாயொழிதல் எடுத்த உடம்பின் சம்பந்தமாதலால் அவ்வுடம்புமாறுங்கால் அவையும மாறும், அறிவின் சம்பந்தமான அன்பு உயிரின் சம்பந்தமாதலால் அதுமாறாது; அதனாலன்றோ, * "எழுபிறப்பும் உனக்காட்செய்கின்றோம்" என்றும், † "எழுமையும் அடியேன" என்றும், ‡ "மாண்டுமாண்டு வந்துவந்து மன்னநின்வணங்கவே வேண்டும் நின்கழற்கண் அன்பு" என்றும் § "புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியா உன்னடியென்மனத்தே வழுவாதிருக்க வரந்தரவேண்டுமே" என்றும் திருவாக்குள் எழுந்தன.

இவ்வாறான உயிரின் சம்பந்தமான அன்பினையுடைய குலமற்தற்கில்லாத குலச்சிறையாரைக் குலத்திற்சிறந்த ஆளுடையபிள்ளையார் "நலமிலராக நலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற குலமிலராகக் குலமதுண்டாகத் தவம்பண் குலச்சிறை" என்று ஓதியருளினார். இத்திருப்பாசுரத்தின் பொருளையே இந்நூலாசிரியர் இவ்விரண்டு திருப்பாடல்களில் வைத்துக்கூறினார். (ரு)

* ச-வது திருமுறை கோயில் திருவிருத்தம்-அ.

† எ-வது திருமுறை - திருப்பாச்சிலாச்சிராமம் - கக.

‡ அ-வது திருமுறை - திருச்சதகம் ஆனந்தத்தழுந்தல்·எச.

§ ச-வது திருமுறை - திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம்-அ.

அமுதூட்டும் நலத்தின் சிறப்பு.

பண்பின் மிக்கார் பலராய் அணையினும்
உண்ப வேண்டி ஒருவர் அணையினும்
எண் பெருக்கிய அன்பால் எதிர்கொண்டு
நண்பு கூர்ந்தமு தூட்டு நலத்தினர்.

(எ - து.) கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என்னும் இந்தஞானத் தொழில்களைப் போதிக்கவல்ல குணத்தில் மிக்காராகிய ஞானசீலமுடையவர் பலர்கூடி ஒருங்கேவந்தாலும், போதிக்கும் ஞானத்தொழிலைவிட்டு சிவயோக நிலையினராய் மௌனநிலையில்நிற்கும் பெரியராகிய அடியவர் உணவு ஒன்றேவேண்டித் தம்மிடத்துத் தனித்து ஒருவராய் வந்தாலும், கூட்டமாய் வந்தாலும் கூட்டும் எண்ணினை விட்டு பெருக்கும் எண்ணளவையிற்சென்றால் அவ்வெண்பெருக்கத்தை யடைவதுபோலப் பெருகிய அன்புடையவராகிய இவர் அவர்களை அவ்வன்பால் எதிர்கொண்டு அவர்களிடத்து நட்பினைமேற்கொண்டு திருவமுது செய்விக்கும் ஞானநலத்தினையுடையவர் என்பதாம்.

இத்திருப்பாட்டான் அறிவுசங்கரற்கன்பரெனப்பெறின் என்ற அவ்வடியின்பொருளை விரித்துரைத்துக் கூறப்பட்டது. எனவே சங்கரற்கு அறிவு அன்பு எனப்பகுத்து சங்கரனையறிதற்கு அறிவாகிய ஞானமும் அச்சங்கரனைக்கலப்பதற்கு அன்பும் உடையவர் ஈண்டெடுத்துக்கொண்ட அடியவர் என்றும், அவ்வடியவர்களை எண்பெருக்கிய அன்பால் எதிர்கொண்டு நண்புகூர்ந்து அமுதூட்டு நலத்தினர் என்றும் கூறியவாறுமெனக.

ஆளுடையபிள்ளையார் இங்ஙனமான குலச்சிறையாரது எண்பெருக்கிய அன்பினை நோக்கியே * "கணங்களாய்வரினும் தனியராய்வரினும் அடியவர் தங்களைக் கண்டால் குணங்கொடுபணியும் குலச்சிறை" என்றருளினார். (௪)

பணிதலுக் குரியாரைக்கண்டு பணியுஞ்சிறப்பு.

பூதி கோவணம் சாதனத் தால்பொலிந்
தாதி தேவர்தம் அஞ்செழுத் தாம்அவை
ஓது நாவணக் கத்தால் உரைப்பவர்
பாதம் நாளும் பரவிய பண்பினர்.

(எ - து.) திருவெண்ணீறு கோவணம் உருத்திராக்கம் ஆகிய இவற்ருல் திருமேனி பொலிவடையப்பெற்று ஆதிதேவனுகிய பரசிவத்தினது திருவெழுத்தைந்தாய் விளங்கும்பொருள்களை மந்தமும் உரையும் அடக்கி மானதமாக ஓதுமுறைப்படி ஓதுகின்றவர்களாகிய அடியார்களது திருவடிகளை நாடோறும் வணங்கிய நற்குணமுடையவர் என்பதாம்.

இத்திருப்பாட்டான் அறிவிலிகளாகிய உலகினர் தம்போன்ற உலகினரைக் குறிகுலங்களான் அறிவதைப்போல அறிவுடையாராகிய உலகினர் சங்கரற்கன்புடைய அறிவினரைப் பூதிகோவணம் சாதனம் என்னும் குறியாலும், அஞ்செழுத்தாம் அவை ஓதும் நாவணக்கத்தால் ஓதுதலாகிய குணங்களாலும் அறியக்கிடக்கின்றமையால் அறிவிற் பெரியாராகிய குலச்சிறையார் அக்குறிகளானும் குணங்களானும் அடியவரை அறிந்து அவர்களது பாதநாளும் பரவிய பண்பினர் என்று கூறப்பட்டது.

குலச்சிறையாரது இப்பண்பினையே "நாவணக்கியல்வாம் அஞ்செழுத்தோதி நல்லராய் நல்லியல்வாகும் கோவணம் பூதி சாதனம் கண்டால் தொழுதெழு குலச்சிறை" என்று ஆளுடைய பிள்ளையார் ஓதியருளினர். (எ)

அமைச்சியலின் காட்டுஞ்சிறப்பு.

இன்ன நல்லொழுக் கத்ினுர் ஈறில்சீர்த்
தென்ன வன்நெடு மாறற்குச் சீர்திகழ்
மன்னு மந்திரி கட்குமே லாகியார்;
ஒன்ன லார்ச்செற்று றுதிக்கண் நின்றுளார்.

(எ - று.) (சிவபெருமான் மகிழத்தக்க) இத்தன்மையவாகிய பல நல்லொழுக்கத்தினை யுடைய குலச்சிறையார் நின்றசீர் நெடுமாறனென்னும் கூன்பாண்டியனுக்கு அமைச்சுத்தொழிலில் சிறப்புப்பெற்று விளங்கும் பரம்பரையாயுள்ள மந்திரிகளுக்கெல்லாம் மேலாகி இருக்கும் முதன்மந்திரியாரா யுள்ளவர். முதல் மந்திரியாரா யிருக்கும் தன்மைக்கேற்ப அரசனுக்குப் பகைவராயுள்ளவரைத்தாமே அழித்து தமக்குள்ள வீர உறுதிக்கண் நிலைபெற்றுள்ளவர் என்பதாம்.

*"கங்கையாடிலென்! காவிரியாடிலென்! கொங்குதண் குமரித்துறையாடிலென்! ஓங்குமாகடல் ஓதநீர் ஆடிலென்!" "பட்டராகிலென்! சாத்திரங்கேட்கிலென்! இட்டம் அட்டியும் ஈதொழில் பூணிலென்! [illegible] ஒன்றும இரண்டுமே அறியிலென்" "கானநாடு கலந்து திரியிலென்! ஈனமின்றி யிருந்தவஞ்செய்யிலென்! ஊனையுண்டல் ஒழிந்துவானோக்கிலென்", "கூடவேடத்தராகிக்குழுவிலென்! வாடியூனைவருத்தித் திரியிலென்", "அரனுக் கன்பிலையேல் ஓடுநீரினை ஓட்டைக்குடத்து அட்டி மூடிவைத்திட்ட மூர்க்கனோடொக்குமே" என்று ஆளுடைய அரசுகள் அருளியபடி அரனுக்கு அன்பின்றிச் செய்யும் எவையும் தீயொழுக்கத்தன வாமேயன்றி நல்லொழுக்கத்தனவாகா. அரனுக்கன்புடையவராய் அவனடியாருடைய பாதநாளும் பணிந்தேத்திநண்புகூர்ந் தமுதாடும் ஒழுக்கமே சிவன்பாலதாகும் நல்லொழுக்கமாகவின் இவ்வொழுக்கத்தை இன்ன நல்லொழுக்கமெனச்சுட்டி அவ்வொழுக்கத்தினை யுடையவர் இவரென்பார் - இன்ன நல்லொழுக்கத்தினர் என்றார். இவ்வொழுக்கத்தினர் இவரென்னும் உண்மை தோன்றவே "வெற்றவே யடியாரடிமிசை வீழும் விருப்பினன்" என்று திருஞான சம்பந்தப் பிள்ளையார் அருளினர்.

* ரு-வது திருமுறை-பாவநாசத்திருக்குறுந்தொகை உ-ங-ரு-எ-கூ.

இன்னநல் லொழுக்கத்தினல் திருஞானசம்பந்தப் பிள்ளையாரால் புகழப்பட்டது போல் உலகினராலும் போற்றப்படும் பெரும் புகழுடையவ ரென்பார் சீர்த் தென்னவன் நெடுமாறற்கு சீர்திகழ் மன்னு மந்திரிகட்கு மேலாகியார் என்றார். மேலாயமந்திரத்தொழில் பெற்றமைக்கேற்பக் காது நல்லொழுக்கத்திற்குப் பகையாயுள்ளாரையும் தமதரசனுக்குப் பகையாயுள்ளாரையும் தாமே வெற்றி கொள்ளும் உறுதியில் நிலைபெற்றிருப்பவர் என்பார் - ஒன்னலார் செற்று உறுதிக்கண் நின்றுளார் என்றார். (அ)

பாண்டிமா தேவியாருக்குத் தொண்டராயிருக்குஞ் சிறப்பு.

ஆய செய்கையர் ஆயவர் ஆரணி
நாய னார்திருப் பாதம் நவின்றுளார்
பாய சீர்ப்புனை பாண்டிமா தேவியார்
மேய தொண்டுக்கு மெய்த்தொண்ட ராயினர்.

(எ - து.) அரசர்க்குரிய அமைச்சாது தொழிலில் தலைமையாரா யிருக்கின்ற மந்திரியாராகிய இவர் கங்காதரனது திருவடிகளைப் போற்றும் இயல்பினையுடையவர். சைவநாடெங்கும் பரவிய புகழுடைய பாண்டிமாதேவியார் தமது உயிரளவும் பொருந்தக்கொண்டிருக்கும் தொண்டினுக்கு மெய்த்தொண்டராயிருப்பவர் என்பதாம்.

பாண்டியனுல் ஆளப்படும் அரசியலுக்கு அமைச்சராகியும் பாண்டிமாதேவியார் கொண்டிருக்கும் சைவதருமவியலுக்கு மெய்த்தொண்டராகியும் உள்ளார் என்பார் - ஆய செய்கையராயவர் என்றும், பாண்டிமாதேவியார் மெய்த்தொண்டிற்கு மெய்த்தொண்டர் ஆயினர் என்றுங் கூறினர். சீகாழிப்பிள்ளையாரால் பாண்டியன் திருநீறணியவும் அத்திருநீறு தமிழ்நாடெங்கும் பரவவுமான பெரும் புகழுடையவர் பாண்டிமாதேவியார் ஆகலான் - பாயசீர் புனை பாண்டிமாதேவியார் என்றார். (௯)

பிள்ளையார் அடிசூடப்பெற்ற மகிழ்ச்சியின் சிறப்பு.

புன்ன யத்தரு கந்தர்பொய் நீக்கவும்
தென்ன நாடு திருநீறு போற்றவும்
மன்னு காழியர் வள்ளலார் பொன்னடி
சென்னி சேர்த்தி மகிழ்ந்த சிறப்பினர்.

(இ - ள்.) பழிசேர் மூத்தியினராகிய சமணர்களுடைய பொய்யுரைகளையும், பொய்க்கோலங்களையும் அழிக்கவும், பாண்டிநாடு முழுவதும் மெய்க்கோலமாகிய திருநீற்றுக்குள்ளாய் சைவசமயத்தைப் போற்றவும், கற்பத்தும் அழியாத சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரது திருவடிகளைத் தமதுசிரமேற்கொண்டு ஆரா மகிழ்ச்சியை யடைந்த பெருஞ்சிறப்பினையுடையவர் என்பதாம்.

அறிவு சங்கரர்கு அன்பரெனப் பெறில் அவரடிபணிந்து வருவாராயும் அரசனுக்கு அமைச்சராயும் பாண்டிமா தேவியாரது தொண்டுக்கு மெய்த்தொண்டராயும் உள்ள சிறப்பினால் அடையத்தகும்பயன் காழிநாடராகிய பிள்ளையாரைக்கொண்டு பழியொன்றும் ஓராதே பாயிடுக்கி வாளாகழியும் சமணலகையர் தம்மையழிக்கக் கழுவிலேற்றியதும் தெருளாத தென்னவ னாடெல்லாம் திருநீறு பாலித்துப் போற்றச்செய்ததுமே யாமென்றும் இங்ஙனமானபயனை சீகாழிநாதனலன்றோபெற்றோம். அங்ஙனம்பெறுதற்கு நமமிடத்து * "அரும்பின அன்பில்லை அர்ச்சனையில்லை, அரனெறியே விரும்பினமாந்தர்க்கு மெய்ப்பணிசெய்கிலம் பொய்க்கமைந்த விரும்பின வுள்ளத்தினேற்கு எங்ஙனேவந்து நேர்ப்பட்டது" என்று மகிழும் சிறப்பினை யுடையவரென்று இத்திருப்பாட்டான் கூறப்பட்டது.

தெருளாத தென்னவன் நாடெல்லாம் திருநீறு பாலிக்கச் செய்தனராகலின் - தென்னர்நாடு திருநீறுபோற்றவும் என்றும்,

---

* கக-வது திருமுறை திருஞானசம்பந்தர் திருவந்தாதி-உச.

* "ஆலித்து மன்னிருகால்வேலைவளர் வெள்ளத்தும்பரொடும் பன்னிருகால்நீரின் மிதந்தவூர் - மன்னும், பிரமனூர் வேணுபுரம்பெ ரொலிநீர்ச்சண்பை, அரன்மன்னுதண்காழி அம்பொன்-சிரபுரம், பூந் தராய்கொச்சைவயம் வெங்குருப்பொங்குபுனல், வாய்ந்தநற்றோணி புரமறையோர்-எய்ந்த, புகலிகழுமலம் பூம்புறவம் என்றிப்பகர்கின் றபண்பிற்றதாகித் - திகழ்கின்ற மல்லைச்செழுநகரமன்ன*** சீரார் கவுணியர்க்கோர் சேயென்ன வந்தங்கவதரித்தவள்ளல்" ஆகலின் - மன்னுகாழியர் வள்ளலார் என்றும், † "என்றும் அடியவருள்ளத்திருப்பன இவ்வுலகோர் நன்றுமலர்கொடு தூவித்துதிப்பன நல்லசங்கத் தோன்றும் புலவர்கள் யாப்புக்குரியன ஒண்கலியைப், பொன்றுங் கவுணியன் சைவசிகாமணி பொன்னடியே" என்றும், ‡ "மன்னிய மோகச் சுவையொளிபூறோசை நாற்றமென்றிப் பன்னியவைந்தின் பதங்கடந்தோர்க்குத் தொடர்வரியபொன்னியல் பாடகக்கிண்கிணிப் பாதம்" என்றும் துதிக்கப்பட்டிருத்தலின் - பொன்னடி என்றும், ஒலிக்கின்ற வொப்பில்லாத முத்தாலாகிய அழகிய ஒருபெருங் காளத்தினின்றும் உலகம் ஈடேற திருஞானசம்பந்தன் வந்தான் என்று ஒலித்து எழாநின்ற ஓசையானது தமது திருச்செவியில் அமுதம்போல் தேக்கியவுடன் நிலத்தின்மீது பணிந்து அளவில்லாத களிப்புடையோரானார் ஆகலின் - பொன்னடிசென்னி சேர்த்தி மகிழ்ந்த சிறப்பினார் என்றும் கூறினார். (௧௭)

ஆசிரியர் இனி இதனைச் சொல்வேனெனல்.

வாதில் தோற்ற அமணரை வன்கழுத்
தீது நீங்கிட ஏற்றுவித் தார்திறம்
யாது போற்றினேன்; மேலினி ஏத்துகேன்
வேத நீதி மிழலைக் குறும்பர் தாள்.

---

* கக-வது திருமுறை திருஞானசம்பந்தர் திருவுலாமாலை.
† ,, ,, மும்மணிக்கோவை-ரு.
‡ ,, ,, திருவந்தாதி-ரு.

(எ - து. ஞானசம்பந்தப் பிள்ளையாரிடத்து அஞ்ஞானசம்பந்தத்தால் தடித்துத் தாம் செய்த வாதத்தில் தோல்வியடைந்த எண்ணாயிரஞ்சமணர்களை, உலகினரெல்லாம் தீவினையினின்றும் நீங்கும்படி வலிய கழுமுனையில் ஏறுமாறு எண்ணி ஏற்றுவித்த இக்குலச்சிறையாரது வலியதிறத்தை இதுவரையில் சொல்லிவந்த அளவில் என்னறிந்து சொல்லித் துதித்தேன் (அறிந்து துதித்தேனில்லை.) இனி வேதங்களிற் கூறப்படும் அறநெறியைக் கைப்பிடித்த பெருமிழலைக்குறும்ப நாயனாரது திருவடிகளைத் துதிக்கின்றேன் என்பதாம்.

இத்திருப்பாட்டால் குலச்சிறையாரது சிறப்பெல்லாம் எம்பிரான் சம்பந்தனருளிய அருளிப்பாடலைப் பொன்போல் போற்றி அதுகொண்டே புகழ்ந்துரைத்தேனையன்றி யான் வேறு புகழ்ந்துரைத்தேனில்லை. அவரது புகழெல்லாம் ஆளுடையபிள்ளையாரது பதிகத்தில் நிரம்பக்கிடக்கின்றது. இனிப் பெருமிழலைக் குறும்பரது புராணத்தைக் கூறுகின்றேன் என்று கூறினார் என்று கூறப்பட்டது. (நக)

குலச்சிறையார் புராணமுற்றிற்று.

உமாபதிசிவம் அருளிய
புராணசாரம்

கோதில்புகழ் கருமணமேற் குடியார் கோவண்
குலச்சிறையார் தென்னர்குல அமைச்சர் குன்றா
மாதவர்கள் அடிபரவு மரபார் பாண்டி
மாதேவியார் அருள்வான் பயிர்க்கு வேலி
காதன்மிகு கவுணியர்கோன் வாகற் கொற்ற
கையரைவை பைக்கரைசேர் கழுவி லேற்று
நீதியினார் ஆலவாய் நிமலர்ச் சேர்ந்த
நிர்மலனார் மும்மலங்கள் நீங்கினாரே

குலச்சிறையார்:— திருப்பெருந் துறையென்னுந் திவ்யக்ஷேத்திரத்திற்கடுத்த மணமேற்குடி என்னுநகரத்தில் அவதரித்து குலச்சிறையார் என்னும் திருநாமம் தரிக்கப்பெற்றவர். பாண்டிநாட்டரசனுபுள்ள[redacted]. நின்றசீர் நெடுமாறர் என்னும் பாண்டியமகாராஜனிடம் அமைச்சருள் தலைமைபெற்றிருந்தவர். இறப்பில் தவமாகிய சரியையாதி பெருந்தவத்தினையுடைய அடியார்களை வணங்கும் முறைமையுடையவர். பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரால் வளர்க்கப்பட்ட சைவப்பயிர்க்கு ஓர்வேலிபோன்றவர். அடியார்களிடத்து அன்புமிகுந்த திருஞானசம்பந்த மூர்த்திகளோடு பலவாதுபுரிந்து தோற்ற வஞ்சகர்களாகிய எண்ணாயிரஞ் சமணத்தலைவர்களை வையையாற்றங்கரையில் நாட்டியகழுவில் ஏற்றும் நீதியையுடையவர். திருவாலவாயான் திருவடியடைந்த ஞானசொரூபர். இவ்வாறு குருலிங்கசங்கம வழிபாட்டில் முக்கரணங்களையும் ஈடுபடுத்திய அவர்என்னுடைய மும்மலங்களையும் நீக்கினவராவர்என்க.

உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது தன்மை எனப்படும் செப்பமுதலிய குற்றமற்ற புகழ்மணம்வீசும் குலமுடையோரையுடையது அவ்வூர் என்பார் - கோதில் புகழ்கரு மணமேற்குடி என்றும், அப்புகழ்க்குணங்களை யுடையவர்களிற்சிறந்து விளங்குவோர் என்பார் -

N23

மணமேற் குடியார்கோ என்றும், மானம் - பெருமை - சான்றாண்மை-பண்புடைமை முதலிய தூயகுணங்களைத் தம்மாட்டுச்சிறைபிடித் தற்குணங்களைப் புறம்பாக்கிச் சிறைப்படுத்துவோர் என்பார் வண்குலச்சிறையார் என்றும், சமண்சமயஞ்சார்ந்திருந்த பாண்டியனாகிய தென்னவனுக்கு (வன்கண் - குடிகாத்தல் - கற்றறிதல் ஆள்வினையோடு கருவியும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் வாய்ப்ப எண்ணவல்ல மந்திரியாய் இருந்து "அறிகொன்றறியான் எனினும் உறுதி உழையிருந்தான் கூறல் கடன்" என்றபடி ஸ்ரீஜ்ஞானஸம்பந்த மூர்த்திகளை வரவழைத்து அவரால் சைவத்திருவாளனாகச்செய்கவர் என்பார் -தென்னர்குலவமைச்சர் என்றும், சரியையாதி நற்றவமுடையாரடிகளை வணங்கும் குணமுடையார் என்பார் - குன்றாமாதவர்கள் அடிபரவும் மரபார் என்றும், தீக்கொளுவார் நஞ்சிடுவார் கருவியிற்கொல்வார் கள்வர் ஆறலைப்பார் சூறைகொள்வார் பிறனில் விழையார் முதலாயினாரைக் கண்ணோடிக் கொல்லாவழிப்புற்களைக்கு அஞ்சாநின்ற பைங்கூழ்போன்ற நலிவு பலவெய்தி உலகு இடர்ப்படுதலின் கோறலும் செங்கோன்முறையாகலான் பாண்டிமாதேவியார் வளர்த்த சைவப்பயிர்க்கு வேலிபோலிருந்துகாத்து களையாய்த்தோன்றிய சமணரைவென்ற கழுவேற்றியது கொடுங்கோன்மை அன்றென்பார் - பாண்டிமாதேவியாரருள்வான் பயிர்க்கு வேலி காதன்மிகு கவுணியர்கோன் வாதில் தோற்ற கையரைவைகைக் கரைசேர்கழுவில் ஏற்றும் நீதியினார் என்றும், இயல்பாகவே பாசங்களினின்று நீங்கிய அநாதிமல முத்தனாகிய இறைவனது மலர்சிலம்படியணைந்த பரமுத்தர் என்பார் மூலவாய் நிமலர்ச்சேர்ந்த நின்மலனார் என்றும், மலமற்றவரே அநாதிமல பெத்தராகிய ஆன்மாக்களது பாசங்களை நீக்கும் ஆற்றலுடையவர் என்பார் நிமலர்ச்சேர்ந்த நின்மலனார் என்மலங்கள் நீக்கினார் என்றும் கூறியவாறும்.

ஸ்ரீ ஜ்ஞானஸம்பந்தன் திருவடி வாழ்க - புராணசாரம் முற்றிற்று.

85300

உ

சிவமயம்.

இந்நூல் உரையாசிரியர் இயற்றியவை.

திருமலைச்சருக்கம்	2	8	0
தில்லைவாழந்தணர் சருக்கம்	2	0	0
இலைமலிந்த சருக்கம்	2	8	0
தேவிபாகவத வசனம்	9	0	0
திருப்போரூர்ச் சன்னதிமுறை உரை (அச்சில்)	3	0	0
காஞ்சிப்புராண உரை (அச்சில்)	10	0	0

ஏனைய பெரியபுராணச் சருக்கங்கள் விரைவில் வெளிவரும்.

விலாசம்:—

திருப்பெருந்துறை - வேலாயுதம் பிள்ளை

திருநாவுக்கரசு மாளிகை

சுமாயுட் இரங்கூன்.

கா — ஏகாம்பரம் பிள்ளை

19, ரெண்டால்ஸ்ரோட்

வேப்பேரி.